(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 2(5).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 ஆகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 செப்தெம்பர் 08, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 53/2023

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் “முல்லோயா கோவிந்தன்” என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப்போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2023

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2023 செப்தெம்பர் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1509/2023

கௌரவ கோகிலா குணவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மைட்டா தொல்லையானது இலங்கையின் தெங்கு பயிர்ச்செய்கைக்கு சேதம் விளைவிக்கின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக தெங்கு விளைச்சல் மிகவும் குறைவடையும் அதேவேளை நுகர்வுக்கு பொருத்தமற்றதாகவும் அமைகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மைட்டா தொல்லையை கட்டுப்படுத்துவதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) இலங்கைக்கு அதிகளவிலான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் தெங்குப் பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் குறுகியகால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1547/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களத்தின் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் என்பன வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி திணைக்களத்திற்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக வருடாந்தம் செலவாகும் தொகை யாது;

(iii) திணைக்களப் பணியாளர்களுக்கு செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு வகைகள் யாவை;

(iv) வெளிநாட்டுத் தபால் சேவைகளை வழங்குவதன் மூலம் திணைக்களம் வருடாந்தம் ஈட்டுகின்ற வருமானம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1582/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் முதற் தடவையாக பதிவு செய்யப்பட்ட புதிய மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித் தனியே யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு சிலிண்டர் கொள்ளளவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட மோட்டார் சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1618/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு சுற்றாடல் அமைச்சினால் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அதன் கீழ் பொறுப்புகள் கையளிக்கப்படும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) ஆயினும், 2022 ஆம் ஆண்டு வரை அது தொடர்பான செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கொள்கையை அமுல்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டமொன்று இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி செயற்பாட்டுத் திட்டம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், அது தயாரிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி கொள்கையை அமுல்படுத்தும்போது நடைமுறை ரீதியில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1640/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எரிவாயுவுக்கான தட்டுப்பாடு மற்றும் அதன் அதிகூடிய விலையேற்றம் காரணமாக மாற்று வலுசக்திகளைப் பயன்படுத்துவதற்கு ஏராளமான புத்தாக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) மேற்படி புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்காக செலவாகும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடியுமென்பதை அறிவாரா;

(iii) மேற்படி புத்தாக்குநர்களையும் அவற்றின் பாவனையாளர்களையும் ஊக்குவிப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1680/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகத்தில் பதவியணி வெற்றிடங்களும் பௌதீக வளப் பற்றாக்குறையும் காணப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் பற்றாக்குறையாகவுள்ள பௌதீக வளங்களை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) வவுனியா பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்குரிய வளாகங்களை முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1760/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த விசாரணைகளின்படி இதுவரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இதுவரை நிவாரணம் வழங்கப்படாத ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1800/2023

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பிரதேச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பிரதேச விற்பனை நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி விற்பனை நிலையங்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருட்கள் வ/ப லங்கா சதொச நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1811/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "எக்ஸ்பிரஸ் பேர்ள்" கப்பல் விபத்தினால் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி சுற்றாடல் பாதிப்பினை மதிப்பீடு செய்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல் பற்றிய செயன்முறையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2533/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் ஆதார வைத்தியசாலைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை மற்றும் தற்போது சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றும் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் எண்ணிக்கை அவர்களுடைய தொடர்பாடல் மொழியின் அடிப்படையில் எத்தனை என்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2023 செப்தெம்பர் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2577/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்கள் அதற்காக பயன்படுத்தும் நீர்த்தேக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அம்மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2621/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2693/2023

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமியோபதி மருத்துவ முறையானது பக்கவிளைவுகள் அற்ற, பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் ஒரு மருத்துவ முறையாக இலங்கையில் பிரசித்தி பெற்றுள்ளது என்பதையும்;

(ii) இத்தகைய மருத்துவ சிகிச்சைகளை அளித்துவருகின்ற சிறந்த ஹோமியோபதி வைத்தியர்கள் பலவருட காலமாக பதிவுசெய்யப்படாது உள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தம்மை பதிவு செய்துகொள்வதற்காக பல வருடங்களாக காத்திருக்கும் ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவுசெய்ய தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(ii) செய்முறைப் பரீட்சை ஒன்றினூடாக அந்த வைத்தியர்களின் புலமையைப் பரிசீலித்து இவர்களைப் பதிவுசெய்ய முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஹோமியோபதி மருத்துவ முறையை முன்னேற்றுவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ஹோமியோபதி சிகிச்சைகளுக்குத் தேவையான மருந்துகளை இறக்குமதி செய்ய முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) ஹோமியோபதி பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2846/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய வாகனமொன்றின் முதல் பதிவு நடவடிக்கை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் நாராஹேன்பிட்டி தலைமை அலுவலகத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், முதல் பதிவு நடவடிக்கையினை மேற்கொள்ளக்கூடிய மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வருடாந்தம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) ஒரு நாள் வாகன உரிமை மாற்றல் சேவை மற்றும் சாதாரண சேவை என்பவற்றுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் வாகன வகுப்பின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2934/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக அத்தாக்குதல் தொடர்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மேற்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரினதும் பெயர், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வகித்த பதவி மற்றும் சேவை நிலையம் என்பவை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஒவ்வொருவரினதும் பெயர், சேவை நிலையம் என்பன தனித்தனியே யாவையென்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்களுள் சில உத்தியோகத்தர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் உயர் பதவிகளை வகிப்பதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதற்கு அல்லது விசாரணை அறிக்கைகளில் மாற்றங்களைச் செய்வதற்கான சாத்தியம் இருப்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2972/2023

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பற்ற முறையில் பாடசாலை மாணவர்கள் சாலை ஓட்டப் போட்டிகளில் பங்குபற்ற வைக்கப்படுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) பாரிய வாகன நெரிசல் நிலவுகின்ற சந்தர்ப்பங்களில் பிரதான நகரங்களைச் சார்ந்ததாக அவ்வாறான சாலை ஓட்டப் போட்டிகளை நடாத்துவதற்காக பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகள்/ நிறுவனங்கள் சாலை ஓட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பிரதான நகரங்களைத் தவிர்த்து வாகன நெரிசல் குறைவான வீதிகளை மாத்திரம் பயன்படுத்தி சாலை ஓட்டப் போட்டிகளை நடாத்துவது பொருத்தமானதாக அமையுமென்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி விடயம் தொடர்பில் அவசியமான அறிவுறுத்தல்களை பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3074/2023

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் —

(i) பணியாற்றும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) நிரந்தர மற்றும் ஒப்பந்த/அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) இன்றளவில் ஒப்பந்த /அமய அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3096/2023

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தேயிலைச் சபைக்காக கிருமிநாசினிகளின் இரசாயனக் கூறுகளை பகுப்பாய்வு செய்வதற்கான இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அதற்காக, செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி இயந்திரம் இதுவரை பயன்படுத்தப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3108/2023

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் இன்றளவில் இருக்கின்ற மாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) நெடுந்தீவில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கால்நடை இனங்களின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கால்நடைகளுக்கு அவசியமான உணவு மற்றும் நீர்த் தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நெடுந்தீவில் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நெடுந்தீவிற்கென நிரந்தர கால்நடை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி தீவிற்கு நிரந்தர கால்நடை வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3232/2023

கௌரவ நிரோஷன் பெரேரா,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு – குளியாப்பிட்டி வீதியில், தும்மோதரை புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) குறித்த பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவேண்டிய திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனம் யாதென்பதையும்;

(v) இன்றளவில் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) தும்மோதரை புதிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 செப்தெம்பர் 21, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

9/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் எட்டாவது நிறைவேற்றதிகார சனாதிபதிக்கு தற்போதுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு ஆலோசகர்களினாலும் ஆலோசனை வழங்கப்படும் விடயத்துறைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அவ்வொவ்வொரு ஆலோசகர்களுக்கும் வழங்கப்படும் சம்பளங்களும் ஏனைய கொடுப்பனவுகளும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆலோசகர்கள் நியமிக்கப்படுகையில் பின்பற்றப்படும் முறையியல் மற்றும் கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

388/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி தேசிய வைத்தியசாலையில் மனித உறுப்புகள் சம்பந்தப்பட்ட தீத்தொழில் முன்னெடுக்கப்படுவதாக 2022.01.27ஆம் திகதி “லக்சர” சமூக ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையொன்றினால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தீத்தொழில் தொடர்பில் விரிவான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு கண்டி தேசிய வைத்தியசாலையின் நிபுணத்துவ வைத்தியர்கள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது என்பதையும்;

அவர்அறிவாரா?

(ஆ) (i) "இறந்த நன்கொடையாளர் உறுப்பு தான தேசிய திட்டத்தின்" கண்டி வலயத்திற்கான பிரதம தொழிற்பாட்டு பொறுப்பதிகாரி, அந்த வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு இதுகுறித்து தெரியப்படுத்தியுள்ளதற்கான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) இத்தகைய குற்றச்சாட்டு சுமத்தப்படுவதன் மூலம் கண்டி தேசிய வைத்தியசாலை குறித்து மக்கள் மத்தியில் தவறானதொரு மனப்பாங்கு உருவாவதையும், வைத்தியசாலைக் கட்டமைப்பு மீதான நம்பிக்கை தகர்க்கப்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இக் குற்றச்சாட்டு அடிப்படையற்றதாயின், அதையொட்டி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

424/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வருடாந்தம் உணவு நிமித்தம் நுகரும் தேங்காய் எண்ணெயின் அளவு;

(ii) அதில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவு;

(iii) இறக்குமதி செய்யப்படும் அளவு;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களில், இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பதிவு செய்யப்படாத தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகம் செய்யப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) தரநியமங்களுக்கு இயைபற்ற தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

437/2023

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொங்கல, ஹேஸ்வத்தைக்கு அருகில் கிங்கங்கையின் நீரேந்துப் பிரதேசமானது இயந்திரங்களைக் கொண்டு வெட்டி துப்பரவு செய்யப்படுகிறது என்பதையும்;

(ii) கொங்கல மலையின் உச்சி வரை விசாலமான பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மண்சரிவு ஏற்படக்கூடும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட சுற்றாடல் அழிவினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கொங்கல சுற்றாடல் தொகுதிக்குரிய இரண்டாயிரத்து ஐநூறு ஹெக்டயர் காணிகளை சிங்கராஜ வனாந்தரத்துடன் ஒன்றிணைப்பது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொங்கல சுற்றாடல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3351/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மாகாண சபைகளின் நிர்வாகத்தின் கீழுள்ள அரச வைத்தியசாலைகளினதும் சுகாதார நிலையங்களினதும் எண்ணிக்கை தனித்தனியே யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையினதும் சுகாதார நிலையத்தினதும் பெயர், அவை அமைந்துள்ள மாகாணம் மற்றும் மாவட்டம் தனித்தனியே யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இருக்க வேண்டிய மற்றும் தற்போது இருக்கின்ற மருத்துவர்கள் மற்றும் நிபுணத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருத்துவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலதிக கற்கைக்காக 2015 ஆம் ஆண்டின் பின்னர் வெளிநாடு சென்ற மருத்துவர்கள் மீண்டும் இலங்கைக்கு வருகை தராமல் உள்ளனரா;

(ii) ஆமெனில், அம்மருத்துவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3358/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அத்தியாவசிய மேற்கத்தேய மருந்து வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பொதுப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மருந்து வகையும் உற்பத்தி செய்யப்படுகின்ற நாடு, உற்பத்தி செய்கின்ற கம்பனி/நிறுவனம் மற்றும் இலங்கைக்கு இறக்குமதி செய்கின்ற கம்பனி/நிறுவனம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பொதுப் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி (iv)இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையானது மொத்த அத்தியாவசிய மருந்து வகைகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அண்மைக்காலத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பின் சதவீதத்தை விட அதிக சதவீதத்தில் மருந்துகளின் விலைகள் அதிகரித்தன என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மருந்துகளின் விலை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3409/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவின், 668 ஆம் இலக்க அளுத்கம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சுமார் 1.5 கி.மீ தூரத்தைக் கொண்ட “கம்மான பார” எனும் பெயரிலான வீதியில் ஒரு இலட்சம் கிராமிய வீதிகளுக்கு காபட் இடும் வேலைத்திட்டத்தின் கீழ் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சுமார் 06 மாதங்களுக்கு முன்னர் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) வீதியில் காணப்பட்ட தார் மற்றும் கொங்கிரீட் பகுதிகள் கழற்றி அகற்றப்பட்டு ஆங்காங்கே ABC அடுக்கு மாத்திரம் இடப்பட்டதோடு மழை காரணமாக மேற்படி ABC அடுக்கும் அடித்துச் செல்லப்பட்டு தற்போது அவ்வீதி பயணிக்க முடியாதளவுக்கு பழுதடைந்துள்ளதென்பதையும்;

(iii) காபட் இடப்படும் வரை தற்காலிக ஏற்பாடாக அவ்வீதிக்கு தார் இடுவதற்கு களுத்துறை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பீடொன்றைச் சமர்ப்பித்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அதன் பிரகாரம், தற்காலிக தார் அடுக்கு இடப்பட்டு மேற்குறிப்பிட்ட வீதி துரிதமாக புனரமைக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3484/2023

கௌரவ வேலு குமார்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், பஹத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குடும்பங்களில் குழாய் மூலமான குடிநீர் வசதிகளைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3570/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3596/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனாதிபதி செயலகத்தில் இயங்கி வருகின்ற விசேட கருத்திட்ட அலகினூடாக 2022.07.14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலகில் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பதவி, சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலகில் பணியாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அரசியல் கட்சியொன்றில் முழுநேர ஈடுபாடுடையவர்கள் என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) மேற்குறித்த அலகினைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 செப்தெம்பர் 22, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

692/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இலங்கை மின்சார சபையின் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலகமும் நிறுவப்பட்டுள்ள இடங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அலுவலகத்திலும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி அலுவலகங்களில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ள கட்டிடங்களில் இயங்கும் அலுவலகங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி அலுவலகங்களுக்கு நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

819/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணவரின் மரணம்/கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் இலங்கையில் கணிசமானளவு பெண்கள் தமது குடும்பப் பொறுப்பை ஏற்று குடும்பத் தலைவர்களாக உள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு குடும்பத் தலைவர்களாக செயற்படும் பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பெண்களுக்கு நிவாரணமளிப்பதற்கு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) கணவரின் மரணம்/ கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மரணம்/ கைவிட்டுச் செல்லுதல் மற்றும் வேறு காரணங்களினால் தமது மனைவியின்றி கணவரால் குழந்தைகள் பராமரிக்கப்படுகின்ற குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்ப அலகுகளுக்கு நிவாரணமளிப்பதற்கு செயற்படுத்தப்படும் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

840/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 வரை ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் மற்றும் நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

854/2023

கௌரவ காமினி வலேபொட,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 100,000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீதிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் இதுவரை அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீதிகளின் நீளம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாத வீதிகளின் நீளம் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை மற்றும் செலுத்த வேண்டியுள்ள தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

874/2023

கௌரவ ரோஹண பண்டார,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மீன் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மீன் இனப்பெருக்க நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1317/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கி வருகின்ற காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு முதல் இது வரை இடம்பெற்றுள்ள விவாகரத்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) காதி நீதிமன்றங்களில் கடமையாற்றும் 60 வயதைத் தாண்டிய காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) பட்டம் பெற்றுள்ள காதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) காதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1718/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல்களின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இப்பெறுமதியானது மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களின் சதவீதமாக மேற்படி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கான வெளிநாட்டு பணவனுப்பல்கள் சட்டபூர்வமான வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2020/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் மஹபொல பயிற்சி நிறுவகம் (மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை) இயங்கிவருகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவகத்தினால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறிகளின் எண்ணிக்கை யாது;

(iii) அப் பாடநெறிகள் யாவை;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி நிறுவகம் எவ்வாறு பயன்படுத்தப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2552/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 60 வயதைப் பூர்த்தி செய்ததன் அடிப்படையில் 2022.12.31 ஆம் திகதியில் ஓய்வுபெறச் செய்யப்பட்ட அரசாங்க ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை ஒரே தடவையில் ஓய்வுபெறச் செய்ததன் காரணமாக அரசாங்க பாடசாலை முறைமை செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்கூறப்பட்டவாறு ஓய்வுபெறச் செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2883/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் மூலம் கால்நடை அபிவிருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும்;

(ii) அதிலிருந்து பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தி என்பவற்றை மேம்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?